Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.389/2025

Dated 11-02-2026
Deposition of witness for : PW 16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுதா | வயது | : | 45 |
| கணவர் பெயர் | : | கஜேந்திரன் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

Ld. D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது தஞ்சாவூர் தெற்கு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன்.

2) கடந்த 6.7.2025 ம் தேதி தஞ்சாவூர அனைத்து மகளிர் காவல்நிலைய ஆய்வாளராகிய நான் தெற்கு காவல்நிலைய பொறுப்பு ஆய்வாளராக இருந்தேன். அன்று இரவு 22.30 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு ரவிச்சந்திரன் என்பவர் துரைமுருகன் என்பவர் கொடுத்த புகாரை பெற்று நிலைய கு.எண்.146/2025 சட்டப்பிரிவு 103(1) BNS படி வழக்கு பதிவு செய்து புகாரையும் அசல் முதல் தகவல் அறிக்கையையும் துரித அறிக்கையாக நீதிமன்றத்தில்

ஒப்படைத்துள்ளார். வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்தார்.

3) அன்றைய தினமே இரவு 23 மணிக்கு சம்பவ இடமான தஞ்சாவூர், கணபதி நகர் சென்று இறந்தவரின் வீட்டில் சாட்சிகள் ஸ்ரீராம், மோனிஸ்கண்ணா, ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.17** ஆகும். அவைகளில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன்.

4) பின்னர் சம்பவ இடத்தில் ரத்தக்கரை படிந்த சிமெண்ட் தரை பெயர்த்து எடுத்த துண்டு ஒன்று, ரத்தக்கரை படியாத சிமெண்ட் தரை பெயர்த்து எடுத்த துண்டு ஒன்று ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். ரத்தக்கரை படிந்த சிமெண்ட் தரை பெயர்த்து எடுத்த துண்டு ஒன்று **அ.சா.பொ.1**, ரத்தக்கரை படியாத சிமெண்ட் தரை பெயர்த்து எடுத்த துண்டு ஒன்று **அ.சா.பொ.2** ஆகும்.அதற்கான கைப்பற்றுகை மகஜர் **அ.சா.ஆ.18** ஆகும். கைப்பற்றிய தடய பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.19** ஆகும்.

5) பின்னர் மேற்படி சாட்சிகளை விசாரித்து தனி தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். வழக்கின்புகார்தாரர் துரைமுருகன் மற்றும் கண்ணுற்ற சாட்சிகளான கார்த்திக், ஜெய்குமார் ஆகியோர்களை விசாரணை செய்தபோது இறந்துபோன திருவேங்கடமும் எதிரியான அறிவழகனும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றும் இருவரும் அந்தவீட்டில் தனியாக குடியிருந்தனர் என்றும் குடிபோதையில் அவ்வப்போது சண்டையிட்டு ஒருவரை ஒருவர்தாக்கி கொள்வார்கள் என்றும் சம்பவ தினமான 6.7.2025ம் தேதி இரவு சுமார் 8 மணியளவில் சம்பவ இடத்திற்கு ஜெயகுமாரும் கார்த்திக்கும் சென்றபோது எதிரியான

அறிவழகன் மர ரீப்பர் கட்டையால் எனது தம்பியை நானே அடித்து கொன்று விட்டேன் என சொல்லிக்கொண்டே எங்களை தாண்டி ஓடினார் என்று கூறினார்கள்.

6) மேற்படி பிரேதத்தை கைப்பற்றி மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சவகிடங்கில் வைக்க ஏற்பாடு செய்தேன். இரவு நேரம் என்பதால் பிரேத விசாரணை செய்யவில்லை. மறுநாள் தஞ்சை தெற்கு காவல் ஆய்வாளர் பொறுப்பேற்றதால் அவரிடம் வழக்குகோப்பை ஒப்படைத்தேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றும் புகாருக்கு ஏற்றாற்போல் வாக்குமூலங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார்செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

2) பிரேதத்தை பார்த்தவுடன் ஏன் பிரேத விசாரணை செய்யாமல் பிரேத்தை சவகிடங்கிற்கு அனுப்பியதற்கான காரணம் என்னவென்றால் நள்ளிரவு நேரம் என்பதால் விசாரணை செய்ய இயலவில்லை.

**மறு விசாரணை**

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்